# திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
# பெரிய திருமொழி
# எட்டாம் பத்து

## ஒன்பதாம் திருமொழி - கைம்மானம்
## திருக்கண்ணபுரம் 9

** கைம்மான மத யானை * இடர் தீர்த்த கருமுகிலை *
மைம்மான மணியை * அணிகொள் மரதகத்தை **
எம்மானை எம்பிரானை * ஈசனை என் மனத்துள்
அம்மானை * அடியேன் அடைந்து உய்ந்து போனேனே 1

தரு மான மழை முகிலைப் * பிரியாது தன் அடைந்தார் *
வரு மானம் தவிர்க்கும் * மணியை அணி உருவில் **
திருமாலை அம்மானை * அமுதத்தைக் கடல் கிடந்த
பெருமானை * அடியேன் அடைந்து உய்ந்து பிழைத்தேனே 2

** விடை ஏழ் அன்றடர்த்து * வெகுண்டு விலங்கல் உற *
படையால் ஆழி தட்ட * பரமன் பரஞ்சோதி **
மடையார் நீலம் மல்கும் வயல் சூழ் * கண்ணபுரம் ஒன்று
உடையானுக்கு * அடியேன் ஒருவர்க்கு உரியேனோ? 3

** மிக்கானை * மறையாய் விரிந்த விளக்கை * என்னுள்
புக்கானைப் * புகழ் சேர் பொலிகின்ற பொன் மலையை **
தக்கானைக் * கடிகைத் தடங்குன்றின் மிசை இருந்த *
அக்காரக் கனியை * அடைந்து உய்ந்து போனேனே 4

வந்தாய் என் மனத்தே * வந்து நீ புகுந்த பின்னை *
எந்தாய்! போய் அறியாய் * இதுவே அமையாதோ? **
கொந்தார் பைம்பொழில் சூழ் * குடந்தைக் கிடந்து உகந்த
மைந்தா! * உன்னை என்றும் * மறவாமைப் பெற்றேனே 5

எஞ்சா வெந்நரகத்து * அழுந்தி நடுங்குகின்றேற்கு *
அஞ்சேல் என்று அடியேனை * ஆட்கொள்ள வல்லானை **
நெஞ்சே! நீ நினையாது * இறைப் பொழுதும் இருத்தி கண்டாய் *
மஞ்சார் மாளிகை சூழ் * வயல் ஆலி மைந்தனையே 6

பெற்றார் பெற்று ஒழிந்தார் * பின்னும் நின்று அடியேனுக்கு *
உற்றானாய் வளர்த்து * என் உயிர் ஆகி நின்றானை **
முற்றா மாமதி கோள் * விடுத்தானை எம்மானை *
எத்தால் யான் மறக்கேன்? * இது சொல் என் ஏழை நெஞ்சே! 7

கற்றார் பற்றறுக்கும் * பிறவிப் பெருங்கடலே *
பற்றா வந்து அடியேன் * பிறந்தேன் பிறந்த பின்னை **
வற்றா நீர்வயல் சூழ் * வயல் ஆலி அம்மானைப்
பெற்றேன் * பெற்றதுவும் * பிறவாமைப் பெற்றேனே 8

** கண்ணார் கண்ணபுரம் * கடிகை கடி கமழும் *
தண்ணார் தாமரை சூழ் * தலைச்சங்க மேல் திசையுள் **
விண்ணோர் நாண்மதியை * விரிகின்ற வெஞ்சுடரை *
கண்ணாரக் கண்டு கொண்டு * களிக்கின்றது இங்கு என்று கொலோ? 9

** செரு நீர வேல் வலவன் * கலிகன்றி மங்கையர் கோன் *
கரு நீர் முகில் வண்ணன் * கண்ணபுரத்தானை **
இரு நீர் இன் தமிழ் * இன்னிசை மாலைகள் கொண்டு தொண்டீர்! *
வரு நீர் வையம் உய்ய * இவை பாடி ஆடுமினே 10

**அடிவரவு:** கைம்மானம் தரு விடை மிக்கானை வந்தாய் எஞ்சா பெற்றார் கற்றார் கண்ணார் செரு வண்டார்

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**

---